**இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்றம் - 2021**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்றத்தின் (மன்றம்) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2019 இன் 23 ஆம் இலக்க இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்ற (கூட்டிணைப்பு) சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈ இற்கான எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ்) இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈ இற்கான எஸ்எல்எ.்.ப்ஆர்எஸ்) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும்

எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

-----------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (எஸ்எம்ஈ இற்கான எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ்) இணங்காமை

| இணங்காமை தொடர்பான குறித்த நியமம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மன்றம் தற்போது பயன்படுத்தி வருகின்ற ஏறத்தாழ ரூபா 6,405,463 கிரயமுடைய முழுமையாக தேய்மான மிடப்பட்ட நிலையான சொத்துக்களை எஸ்எம்ஈ இற்கான எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் இன் 10.15 முதல் 10.18 வரையான பிரிவுகளிலுள்ள ஏற்பாடுகளின் படி அந்த சொத்துகளின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தை மீள் மதிப்பீடு செய்வதற்கும் அதன்படி மதிப்பீட்டுத் தவறை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக தேய்மானம் செய்யப்பட கணனிகள், அலுவலக தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் அலுவலக மறுசீர மைப்பு ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களின் கணக்கீட்டு மதிப்பீடுகளை மாற்றுவதற்கு, பிரிவு 10.15 இன் படி அவற்றுக்கு புதிய தகவல்கள் அல்லது புதிய முன்னேற்றங்கள் இருத்தல் வேண்டும்.<br>அவ்வாறு கணக்கீட்டு மதிப்பீடுகளை மாற்றுவதற்கு மீளாய்வாண்டில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட புதிய தகவல்கள் அல்லது புதிய முன்னேற்றங்களை நாங்கள் எதிர்கொள்ளவில்லை. | நிதிக்கூற்றுக்களின் நியாயமான சமர்ப்பித்தலிற்காக முழுமையாக தேய்விடப்பட்ட சொத்துக்களின் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலத்தை மன்றம் மீள்மதிப்பீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) எஸ்எம்ஈ இற்கான எஸ்எல்எ.ஃப்ஆர்எஸ் இன் 20.16(உ) பந்தியின் படி, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து ரூபா 1,680,000 (பெ.சே.வ. நீங்கலாக) வருடாந்த குத்தகை வாடகைக்கு 30 ஆண்டுகால குத்தகை அடிப்படையில் பெறப்பட்டிருந்த பயன்பாட்டு உரிமைச் சொத்துக்களுடன் தொடர்புடைய நிகழத்தக்க வாடகை, புதுப்பித்தல் அல்லது கொள்வனவு விருப்பங்கள் மற்றும் விரிவாக்கத்திற்கான பகுதிகள், உப குத்தகைகள் மற்றும் குத்தகை ஏற்பாடுகளால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் போன்ற தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த குத்தகையின் சட்ட ஆவணமான நிலக் குத்தகை தொடர்பான பதிவு செய்யப்பட்ட குத்தகை ஆவணத்தின் பிரதி மீளாய்வாண்டில் எமக்கு கிடைத்திருக்காததுடன் அது 2022 மார்ச் 21 அன்றுதான் எமக்குக் கிடைத்தது. எனவே, தேவையான வெளிப்படுத்தல்களை அடுத்த ஆண்டு நிதிக்கூற்றுக்களில் நாங்கள் செய்வோம். | குத்தகைக் காணி தொடர்பான தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 473,500 மொத்தத் தொகையான 3 பெறவேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் மிகைக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், நட்டக்கழிவு ஏற்பாட்டை மேற்கொள்வதற்கான கணகீட்டுக் கொள்கையொன்று மன்றம் ஆரம்பிக்கப்பட்டது முதல் உருவாக்கப்பட்டு அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவைகள் குறித்து அநேக முகாமைத்துவ மற்றும் நிதிக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டது. அதன்பின்னர், மன்றத்தின் சகல நிதிச் செயற்பாட்டு விடயங்களுக்குமாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள மேற்படி குழுக்களின் கருத்துக்களைப் பெற்று இந்த மீதிகள் பதவழிக்கப்பட்டன. | நிலுவையிலுள்ள மீதிகளை பதிவழிப்பதற்குப் பதிலாக நட்டக்கழிவை மேற்கொள்வதற்கான கணகீட்டுக் கொள்கையொன்று மன்றத்தால் உருவாக்கப்படுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்துக்குச் சொந்தமான கணனித்திரை மற்றும் குளிர்சாதனப்பெட்டி என்பன இந்த அறிக்கையின் திகதி வரை விலைமதிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களிற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கும் எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | இந்தச் சொத்துக்கள் இழக்கப்படுவதற்கான ஆபத்தை குறைப்பதற்கு அவற்றை விலைமதித்து நிதிக் கூற்றுக்களிற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கும் எடுத்துவருதல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இல்லாமை**

| விடயம் | தொகை | கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அலுவலக உபகரணம் | 2,247,919 | விபரமான பட்டோலைகள் | இந்த மீதிகள் மிகவும் பழமைவாய்ந்தவையாக இருப்பதால் அதற்குரிய விபரங்களை எமக்குப் பெறமுடியாதுள்ளதுடன், அவற்றை பூச்சிய பெறுமதிக்கு கொண்டுவருவதற்கு ஏற்ற விதத்தில் அகற்றல் கணக்கின் ஊடாக நிதிக்கூற்றுக்களிலிருந்து அவை நீக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள ஒவ்வொரு வரிசை விடயத்துடனும் தொடர்புடைய விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| அலுவலக தளபாடம் | 644,218 | -மேற்படி- | | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319 ஆம் பந்தி | மன்றத்தை கூட்டிணைப்பதற்கு முன்னர் இம்மன்றம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக தொழிற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத் திடமிருந்து கலைப்புச் சான்றிதழை பெற்றுக் கொள்வதில் காணப்படுகின்ற தாமதம் காரணமாக மன்றம் அதன் கலைத்தல் செயற்பாட்டை 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் பூரணப்படுத்துவதற்கு தவறியிருந்தது. | இதுவரை உள்நாட்டு இறைவரி திணைக்களம் வரி அனுமதியை வழங்கவில்லை, இது இல்லாமல் கம்பனிகள் பதிவாளர் கலைப்புக்கான எமது விண்ணப்பத்தை ஏற்க மாட்டார். இது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்பதால், இந்த விவகாரம் குறித்து நிதி அமைச்சின் செயலாளரிடம் தொடர்பு கொண்டுள்ளோம். | தாமதமின்றி கலைத்தல் செயற்பாடுகளை முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு | மன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளும் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தினுள் உள்ளக கணக்காய்வுத் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்காக தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | மன்றத்தின் ஆகக் குறைந்தளவான செயற்பாடுகளைக் கருத்திற் கொள்கையில், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை தாபித்தல் மற்றும் தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரை நியமித்தல் கிரயத்தை குறைக்கும் செயற்பாடு என முகாமைத்துவம் கருதவில்லை. | மன்றத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளும் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 5,939,945 தொகையான மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 19,138,967 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 13,199,022 தொகையான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கையை கட்டியயெழுப்புதல் கண்காட்சி இலிருந்தான வருமானம் குறைந்தமையே இந்த பின்னடைவிற்கான பிரதான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2018 நவம்பர் 15 முதல் ஆரம்பிக்கின்ற 09 ஆண்டுகளுக்கு அலுவலக வளாகத்தைப் பெற்றுக்கொள்வதற்காக, முழு காலத்திற்கான மொத்த குத்தகை வாடகையாக ரூபா 15,000,000 முன்கூட்டியே செலுத்தியதன் மூலம் 2019 ஓகஸ்ட் 02 அன்று மன்றம் தனியார் லிமிடெட் கம்பனியுடன் குத்தகை உடன்படிக்கையொன்று செய்துகொண்டது. இதனிடையே, இரண்டு ஆண்டுகளுக்குள் செயலக கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,680,000 வருடாந்த குத்தகை வாடகையின் மீது 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் 30 பர்சஸ் காணி யொன்றை பெற்றுக்கொள்வதற்காக 2021 திசெம்பர் 29 அன்று நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் (UDA) மற்றொரு குத்தகை ஒப்பந்தத்தில் மன்றம் கைச்சாத்திட்டிருந்தது.<br><br>2019 ஓகஸ்ட் 02 அன்று மன்றத்திற்கும் தனியார் லிமிடெட் கம்பனிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கை 2027 ஆம் ஆண்டு வரை செல்லுபடியாகும் என்ற நிலைமை காணப்பட்ட போதிலும், ஏற்கனவே மேற்குறிப்பிட்ட கம்பனிக்கு 2024 முதல் 2027 வரையிலான காலப்பகுதிக்குச் செலுத்திய குத்தகை வாடகையான ரூபா 5,000,000 தொகையை அறவிடுவதற்கு நடவபடிக்கை எடுக்காது செயலக கட்டிடத்தை நிர்மாணித்து, தற்போதுள்ள அலுவலகத்தை 2024 இற்குள் புதிய கட்டிடத்திற்கு மாற்று வதற்கு மன்றம் உத்தேசித்துள்ளது. இதனால் எதிர்காலத்தில் மன்றத்திற்கு ரூபா 5,000,000 இழப்பு ஏற்பட வாய்ப்பு காணப்படுவதை கணக்காய்வில் நிராகரிக்க முடியாதுள்ளது. | குத்தகை உடன்படிக் கையை 6 மாத முன் அறிவிப்பை வழங்குவதன் மூலம் 4 ஆண்டுகளு க்குப் பின்னர் முடிவிற்குக் கொண்டு வருவதற்கான வசதி காணப்படுவதுடன் குத்தகைதாரர் பயன்படு த்தாத காலத்திற்கு முன்கூட்டியே செலுத்திய குத்தகை வாடகையைத் திரும்பப் பெறுவதற்கு அவருக்கு முடியும். | மன்றத்துக்கு எதிர் காலத்தில் ஏற்படும் இழப்புகளைத் தவிர்ப் பதற்கு ஏற்ற விதத் தில் முடிவெடுப்பத ற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேலும், UDA உடன் செய்து கொள்ளப்பட்ட குத்தகை உடன்படிக் கையின் 1.9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் புதிய செயலக கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்கான நிதியம் எதுவும் நிறுவப்பட்டிருக்கவுமில்லை. | | |
| (ஆ) மாதாந்த நிர்மாணச் செய்தித்தாள் தொகுப்பை அச்சிட்டு வெளியிடும் சேவைகளைப் பெறுவதற்காக 2015 மார்ச் 06 அன்று மன்றம் அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஆ∴ப் சிலோன் லிமிடெட் (ANCL) உடன் ஓராண்டுக்கு ஒரு புரிந்துணர்வு உடன் படிக்கை (MOU) செய்துகொண்டதுடன் இந்த உடன்படிக்கை காலம் 2020 மார்ச் 06 அன்று முடிவடைந்திருந்தது. இருப்பினும், புரிந்துணர்வு உடன்படிக்கை காலம் முடிவடைந்த பின்னர் ANCL ஆல் புதிய விலை விகிதங்கள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை நீடிக்க அல்லது புதுப்பிக்க மன்றம் எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | புதிய புரிந்துணர்வு உடன் படிக்கை (MOU) செய்து கொள்வதற்கான பேச்சு வார்த்தைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம் | தற்போதைய புரிந்து ணர்வு உடன்படிக் கையை நீடிக்க அல்லது புதுப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) ஏனைய செலுத்த வேண்டிய மற்றும் பெறத்தக்கவைகளின் கீழுள்ள ரூபா 2,442,028 மதிப்புள்ள மூன்று (03) கணக்குகள் 2022 மே 31 இல் உள்ளவாறும் கூட அந்தக் கணக்குகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படா மல், 03 ஆண்டுகளுக்கும் மேலாக நிதிக் கூற்றுக்களிற்கு தொடர்ந்தும் முன்னெடு த்து வரப்பட்டிருந்தன. | - ரூபா 229,792 பிடித்து வைத்த வரி என்பது இலங்கை மேர்சன்ட் வங்கியினால் எமக்குச் செலுத்திய வட்டியின் மீது கழிக்கப்பட்ட தொகையாவதுடன் அதனை 3 ஆண்டு களிற்குள் கோருவ தற்கு முடியும் என்பத னால் அதனை எதிர் வரும் ஆண்டில் பெற்றுக் கொள்வோம்.<br><br>- பெறவேண்டிய ரூபா 1,865,865 வருமான வரி மற்றும் செலுத்த வேண்டிய பெ.சே.வ. இன் வரவு மீதி ரூபா 346,371 தொகை – உள்நாட்டு இறைவரித் திணைக்களம் எமது பண அனுப்புதல்களை இன்னும் முடியவாக்க | பயனுள்ள நடவடிக் கைகளை எடுப்பதன் மூலம் இந்த இந்தக் கணக்குகளை அகற்று வதற்கு முயற்சித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வில்லை என்பதுடன் 2017/2018 ஆம் ஆண்டிற்குரிய வருமான வரி தொடர்பில் இன்னும் வினவல்களை அனுப்புகின்றது. | |
| (ஈ) மனித வளங்கள் மற்றும் நிதி வளங்களை முகாமைத்துவம் செய்வது தொடர்பான அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை வழங்கும் நடைமுறைக் கையேடு மற்றும் நிதிக் கையேடு ஆகியவை மன்றத்திடம் காணப்படவில்லை. | நடைமுறைகள் கோவையொன்றை தயாரிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். | மேலும் தாமதிக்காது நடைமுறைக் கையேடு மற்றும் நிதிக் கையேடு ஆகியவற்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்படி, மன்றம் செலுத்த வேண்டிய வருமான வரி ரூபா 2,304,743 ஆனதுடன், இதில் ரூபா 2,097,275 தொகை இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2017 ஆம் ஆண்டு வரை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இன்னும் வரி அறிக்கையை இறுதி செய்யாததால், செலுத்த வேண்டிய தொகையிலிருந்து திருப்பிச் செலுத்தப்பட்ட ரூபா 1,096,789.00 தொகை தொடர்புடைய கணக்கிற்கு இன்னும் மாற்றப்படவில்லை. | வரி அனுப்புதல்களை பூரணப்படுத்தி வரி நிலுவைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு விரைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களிலுள்ள ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் (PPE) கீழ் காட்டப்பட்டுள்ள அலுவலக மறுசீரமைப்புக்கான கிரயமான ரூபா 1,691,092 தொகை மன்றத்தின் நிலையான சொத்துகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 3 ஆண்டுகளுக்கு முன்னரான எங்கள் முந்தைய குத்தகை இடத்துடன் தொடர்புடைய ரூபா 1,961,092 அலுவலக மறுசீரமைப்பு தொகை இப்போது நிதிக் கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற ஒவ்வொரு சொத்து விடயங்களினதும் விபரங்களை நிலையான சொத்துக்கள் பதிவேட்டிலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) மன்றம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள அதன் ரூபா 7,993,623 கிரயமுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை இனங்காண்பதற்கும் வருடாந்த சொத்து மெய்மையாய்வை மேற்கொள்வதற்கும் இயலுமான விதத்தில் அவற்றிற்கு குறியீடு இட்டிருக்காததுடன் அக்குறியீடுகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கியிருக்கவுமில்லை. | முகாமைத்துவம் ஒரு மெய்மையாய்வுக் குழுவை நிறுவியுள்ளதுடன் இந்த குறைபாடுகள் அடுத்த ஆண்டில் சரிசெய்யப்படும். | நிலையான சொத்துக்களை உரியவாறு இனங்காணக் கூடிய விதத்தில் அவற்றுக்கு குறியீடு இடப்படுதல் வேண்டும். |

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கையை தீர்மானித்தல், அந்த ஊழியர்களை நியமித்தல், பணிநீக்கம் செய்தல், சேவையிலிருந்து இடைநிறுத்துதல், அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அவர்களிற்குரிய சம்பளம், படிகள் மற்றும் பணிக்கொடைகளை வழங்குதல் என்பன மன்றத்தின் பொறுப்பாக காணப்பட்ட போதிலும், மன்றத்தின் சுமூகமான செயற்பாட்டுக்காக தகுதியுள்ள மற்றும் நிரந்தரமான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பொன்றையும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றையும் மன்றம் வைத்திருக்கவில்லை. அதன்விளைவாக மன்றத்தின் அனைத்து பதவியணியினரும் ஒப்பந்த அடிப்படையிலேயே ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன், அவர்களில் 09 உத்தியோகத்தர்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 முதல் 16 ஆண்டுகால வீச்சில் ஒப்பந்த அடிப்படையில் வேலையாற்றி வருகின்றனர். | 2001 இல் மன்றம் தாபிக்கப்பட்டது முதல் மன்றத்திடம் அங்கீகரித்த ஊழயர் கோப்பொன்று இருக்கவில்லை. அனைத்து ஆட்சேர்ப்புகளும் முகாமைத்துவக் குழு மற்றும் பணிப்பாளர் சபையில் கலந்துரையாடப்பட்ட பின்னர் தேவையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. மன்றத்தின் கொள்கையானது அனைத்து ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் காணப்பட வேண்டுமென்பதாகும். | 2019 இன் 23 ஆம் இலக்க இலங்கை நிர்மாணக் கைத்தொழில் மன்றத்தின் (கூட்டிணைப்பு) சட்டத்தின் 6(எ) ஆம் பிரிவின் படி மன்றத்தின் சுமூகமான செயற்பாட்டுக்காக தகுதியுள்ள மற்றும் நிரந்தரமான பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பொன்றும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமொன்றும் மன்றத்திடம் காணப்படுதல் வேண்டும். |